கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2025ம் வருடம் அக்டோபர் மாதம் 13ம் தேதி திங்கட்க்கிழமை
இடைநிலை மனு எண். 3 /2025
இன்
இடைநிலை மனு எண். 334 /2021
இன்
அசல் வழக்கு எண்.385/2010
-----

T. செல்லம் (இறப்பு) ... 1ம் பிரதிவாதி

1) எம். செல்லம்
2) எம். செல்லம்
3) எம்.பாண்டி
4) எம். செல்லாயி
5) எம். சந்தானம் ... 1 முதல் 5 மனுதாரர்கள்/
2 முதல் 6 பிரதிவாதிகள்

/எதிர்/

ஆறுமுகம் ... வாதி

இறுதியாக இம்மனு 25.09.2025ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்

திரு.N.நமசிவாயம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.M.லிங்குசாமி அவர்கள் ஆஜராகியும், மனுதாரர்கள் தரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

1 முதல் 5 மனுதாரர்கள்/2 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் பட்டியலில் கண்ட தஸ்தாவேஜுகளை (Send for) வரவழைத்தும் ஆவணங்களில் உள்ள கைரேகையினை ஒப்பீடு செய்ய தடவியல் ஆய்வகத்திற்கு அனுப்புவதற்காக இந்த மனுவை அனுமதிக்க உத்தரவிட வேண்டி இம்மனுவானது கட்டளை 16 விதி 6 மற்றும் CRP 75 மற்றும் 151 cpc படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :**

2.1) இந்த வழக்கின் எதிர்மனுதாரர் தனது பிராதில் 1ம் பிரதிவாதியான த.செல்வம் என்பவரும் அவரது சகோதரர் முனியாண்டி என்பவரும் மைனர்களான இந்த 2 முதல் 4 மனுதாரர்களை கட்டுப்படுத்தி 04.10.1950ம் ஆண்டு பழனியாண்டி சாம்பான் என்பவருக்கு ஒரு கிரையப் பத்திம் பதிந்து கொடுத்ததாகவும், மேற்படி 04.10.1950ம் தேதிய கிரையப்பத்திரமானது மோசடியான ஒன்று என்றும், எனவே அதனை நிரூபிக்கம்பொருட்டு

சமூகம் நீதிமன்றத்தில் மேற்படி கிரையப் பத்திரத்தில் உள்ள கைரேகையினை உறுதி செய்யும் பொருட்டு கைரேகை நிபுணர் அவர்களுக்கு அனுப்பி அதனை ஒப்பீடு செய்ய வேண்டும் என்று IA No. 334/2021 என்ற மனு தாக்கல் செய்து, மனு அனுமதிக்கப்பட்டு நிலுவையில் உள்ளது. இந்நிலையில் எதிர்மனுதாரர் தரப்பில் 04.10.1950ம் தேதிய அசல் கிரையப்பத்திரம் தங்கள் வசம் இல்லை என்று மெமோ தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.2) எனவே எதிர்மனுதாரர் குறிப்பிட்டுள்ள 04.10.1950ம் தேதி பதிவு கிரையப் பத்திரத்தினை சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து அவர்களால் பராமரிக்கப்படும் ஒரு நகலினை அவர்கள் வசம் உள்ள அசல் ஆவணத்தோடு சமூகம் நீதிமன்றத்திற்கு வரவழைத்து (Send for) அதில் உள்ள கைரேகையினை ஒப்பீடு செய்ய தடவியல் ஆய்வகத்திற்கு அனுப்புவது முக்கியமான ஒன்று என்றும், எனவே, மனுதாரர்கள் தரப்பில் மதுரை மாவட்ட தெற்கு இணை சார்பதிவாளரை சாட்சியாக ஆவணங்களுடன் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்ப உத்தரவிட வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இருதரப்பு வாதுரைக்கும் போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

**<u>தீர்மானிக்க வேண்டிய விசயம்</u>** :

4. மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>** :

5. அசல் மனுவானது மதுரை தெற்கு இணை சார்பதிவாளரை வரவழைத்து இந்நீதிமன்றத்தில் ஆவணங்களை தாக்கல் செய்ய உத்திரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. இந்நிர் மனுதாரர்கள் மனுவில், 04.10.1950ம் தேதிய கிரையப்பத்திரமானது மோசடியான ஒன்று என்றும், எனவே அதனை நிரூபிக்கம்பொருட்டு சமூகம் நீதிமன்றத்தில் மேற்படி கிரையப் பத்திரத்தில் உள்ள கைரேகையினை உறுதி செய்யும் பொருட்டு கைரேகை நிபுணர் அவர்களுக்கு அனுப்பி அதனை ஒப்பீடு செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் எதிர்மனுதாரர் தரப்பில் 04.10.1950ம் தேதிய அசல் கிரையப்பத்திரம் தங்கள் வசம் இல்லை என்று மெமோ தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள ஆவணமானது 1) 04.10.1950ம் தேதியில் (ஆவண எண்.3110/1950)ஆவணம் பதியும்போது தங்களது அலுவலக உபயோகத்திற்காக பதியப்படும் பத்திரப்பதிவேடு. 2) 04.10.1950ம் தேதியில்

(ஆவண எண்.3110/1950) பத்திரம் பதியும் போது கிரையதாரர் மற்றும் கிரையம் வாங்குவோரிடம் பெறப்படும் கையெழுத்து சம்மந்தமாக உள்ள ஆவணங்கள் அனைத்தும் ஆகும். எனவே, மனுதாரர் தரப்பில் மதுரை தெற்கு இணை சார்பதிவாளரை ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய அழைப்பாணை அனுப்ப வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

7. அசல் வழக்கில் கடந்த 15.03.2018ல் வா.சா.1 விசாரணை செய்யப்பட்டு, வா.சா.1யை குறுக்கு விசாரணை செய்தபோது, வாதி தனது சாட்சியத்தில் மேற்படி 1950ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் அசல் தொலைந்துவிட்டதாகவும், நகல் ஆவணம் மூலமாக அசல் வழக்கு தாக்கல் செய்ததாக சாட்சியமளித்துள்ளார். மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து மனுவில் கூறியுள்ளபடி ஆவணங்களை வரவழைத்தாலும், மேற்படி ஆவணங்கள் எந்த ஆவணத்தோடு ஒப்பிட்டு மேற்படி 1950 கிரைய பத்திரத்தில் உள்ள கைரேகையை ஒப்பீடு செய்யலாம் என்று மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கவில்லை.

8. மேலும், உரிமையில் நடைமுறை விதி 75ன்படி, அரசு அலுவலத்திலிருந்து ஒரு ஆவணத்தை நீதிமன்றம் மூலம் பெறுவதற்கு முன்பாக உரிய அலுவலகத்தில் மனுதாரர் மனு செய்து மனுதாரருக்கு உரிய ஆவணம் கிடைக்காத நிலையிலேயே, மேற்படி விதி 75ன் கீழ் மனு தாக்கல் செய்ய முடியும். இந்நிலையில், மனுதாரர் மனுவில் கூறியுள்ள

ஆவணங்களானது உரிய சார்பதிவாளர் அலுவலகத்தில் மனு செய்யும் நிலையில், எளிதாக கிடைக்கக்கூடிய ஆவணம் ஆகும்.

9. மேலும், 04.10.1950ம் தேதியிட்ட ஆவணத்தை எழுதி கொடுத்த நபர் இறந்துவிட்டார் என்று எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவித்த நிலையில், மேற்படி 04.10.1950ம் தேதியிட்ட நகல் ஆவணம் மற்றும் பதிவேட்டில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகையை எந்த ஆவணத்தினை கொண்டு மனுதாரர் ஒப்பிட உள்ளார் என்ற விபரத்தை மனுதாரர் தரப்பில் மனுவில் தெரிவிக்காத நிலையில் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும், இம்மனுவானது உரிமையியல் நடைமுறை விதி 75ன் கீழ் முறையாக தாக்கல் செய்யவில்லை. எனவே, மதுரை தெற்கு இணை சார்பதிவாளரை சாட்சியாக விசாரணை செய்வதற்கான அடிப்படை முகாந்திரம் எதுவும் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு சட்டப்படி நிலைத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,** மனுதாரர்/வாதியின் இம்மனுவானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.10.13 16:26:38 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

**இணைப்பு:**

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.10.13 16:26:46 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

இடைநிலை மனு எண். 3 /2025
இன்
இடைநிலை மனு எண். 334 /2021
இன்
அசல் வழக்கு எண்.385/2010
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 13.10.2025